ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 5 இதழ் : 11 செப்டம்பர் 2009

## கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.

சங்கீதம் 119:1



ஆசிரியர்
சகோ. வே. தேவதாஸ்



## சகோ. ராம்சிங் டாமோர்

குஜராத்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! என்னுடைய பெயர் ராம்சிங் டாமோர். குஜராத்திலுள்ள தாகோத் மாவட்டத்தைச் சேர்ந்த லிம்பாகேடி கிராமத்தைச் சேர்ந்த நான் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தில் பிறந்தவன். நான் இயேசுவை அறிவதற்கு முன்பு விக்கிரகங்களை வணங்கியும், மந்திரவாதிகளை நாடியும் வந்தேன். மேலும் சாராயம், பீடி, தம்பாக்குபோடுவது, அடிக்கடி சண்டையில் ஈடுபடுவது போன்றபலவிதமான கெட்டப்பழக்கங்களுக்கு அடிமையாக பாவ வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். ஒருமுறைபயங்கரமான வியாதியானல் பாதிக்கப்பட்டேன். பல மருத்துவமனைகளுக்குச் 1சென்றும், மந்திரவாதிகளிடம் சென்றும் நோய் குணமாகவில்லை. கடைசியாக ஊழியர் சகோ. நார்சிங் பாபோர் வீட்டிற்கு சென்றேன். அவர் இயேசுவைப்பற்றிக் கூறி வேதவசனங்களை விளக்கி இப்படியாக கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார். உடனே எனக்கு இயேசுவின் பேரில் விசுவாசம் வந்தது. ஊழியர் எனக்காக ஜெபித்தார். உடனே தேவன் என்னைத் தொட்டு சுகம் கொடுத்தார். இயேசுவே உண்மையான ஜீவனுள்ள தேவன் என்று இயேசுவை ஏற்றுக்கொண்டேன்.

நான் தொடர்ந்து சபைக்கு சென்றேன். வேதம் வாசித்து ஜெபித்தேன். எங்கள் கிராமத்தில் நான் ஒருவன் தான் கிறிஸ்தவன். வீட்டிற்கு அருகே இருப்பவர்கள் நோயாளிகளை என்னிடம் கொண்டுவந்தார்கள். நான் இயேசுவின் பேரைச்சொல் ஜெபித்தவுடன் தேவன் சுகம் கொடுத்தார். எனக்கு என்னுடைய கிராம மக்களை குறித்த பாரம் வந்தது. உடனே ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன். நான் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து எங்கள் சொந்த பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறோம். எங்களுக்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. Prince Jawahar** - Chennai

# ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



ஆண்டவரும் இரட்சகருமான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவகிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், தியாகமான ஆதரவினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சுதேச ஊழியர்கள் கூடுகை :**

கடந்த ஆகஸ்டு மாதத்தில் 3,5,8,10,14 ஆகிய நாட்களில் ஊழியர்கள் கூடுகை வெகு சிறப்பாக நடைறெ தேவன் கிருபை தந்தார். “நல்ல மேய்ப்பனாக எப்படி ஆடுகளை மேய்த்து சபையை கண்காணிக்க வேண்டும்” என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தை பகிர்ந்துகொள்ளப்பட்டது. பிரதான மேய்ப்பன் வெளிப்படும் நாளுக்காக ஆயத்தத்துடன் பணிபுரியவும், நல்ல மேய்ப்பனாய் இயேசுவின் மேல் இருந்த அபிஷேகத்தை வாஞ்சித்து நிரப்பப்பட்டார்கள். தேவனுக்கே மகிமை!

**சுதேச ஊழியர் பெண்கள் கூடுகை :**

முன்பதாக 31.07.2009 வெள்ளிக்கிழமை அன்று மூத்த சுதேச ஊழியர்கள் மனைவிமார்கள் 100 பேர்கள் இணைந்து நடத்திய ஜெபக்கூடுகையில் ஜுலை மாத ஆசீர்வாதங்களுக்காக துதித்து ஜெபித்து ஆகஸ்டு மாதத்திற்காக ஜெபித்தபோது தேவ ஆவியானவர் வல்லமையாக இறங்கிவந்தார். தெபோராளைபோல எழும்பி சத்துருக்களை முறியடித்து தேவராஜ்ஜியத்தை கட்ட வேண்டும் என **சகோதரி வஹிதா தேவதாஸ்** பகிர்ந்துகொண்டு ஜெபித்தபோது பரிசுத்த ஆவியானவர் அபரிதமாக ஊற்றப்பட்டார். ஆராதனை வேளையில் தேவபிரசன்னம் இறங்கி பரலோகமாக காட்சியளித்தது. தேவ தரிசனங்களும், தீர்க்கதரிசன வார்த்தைகளும் கிடைக்கப்பெற்றார்கள்.

**இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம் அஹமதாபாத் (குஜராத்)**

தேவ கிருபையால் 01.08.2009 சனிக்கிழமை அன்று இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் பிரார்த்தனை கூட்டத்தில் தேவ செய்தியளிக்க அழைக்கப்பட்டோம். “விடுவிக்கும் திரியேக தேவன்” தலைப்பில் செய்தி தரும்படியாக ஆவியானவர் கிருபைதந்தார். அரங்கம் முழுவதும் நிரம்பி இருந்து ஜனங்கள் மீது ஆவியானவர் இறங்கி வந்தார். அநேகர் பாவங்கள், சாபங்கள், நோய்களி–ருந்தும், பிசாசின் கட்டுகளி–ருந்தும் விடுதலை பெற்றார்கள். அநேகர் தனியாகவும் சந்தித்து ஜெபித்து ஆலோசனை பெற்றுச் சென்றார்கள். இயேசு அழைக்கிறார் ஜெபகோபுர பொறுப்பாளர் சகோ. பாவேஷ் மிக சிறப்பாக செய்திருந்தார்கள். கூடி ஜெபித்து தேவனுக்கு நன்றி கூறினோம்.

**பணித்தள வருகையும் ஊழியங்களும்:**

சென்னை St.Thomas Mount- –ருந்து போதகர் சாலமோன் அவர்கள் குடும்பமாக ஆகஸ்டு 9 வரை பணித்தளத்திற்கு வருகை தந்து கிராம சபைகளில் தேவனுடைய செய்தி வழங்கினார்கள். மேலும் மத்தியபிரதேச சபைகளில் சிறப்பு கூடுகையிலும் பங்குபெற்றார்கள். புதிய சுதேச ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்கவும் தேவன் கிருபை தந்தார். மேலும் குஜராத்

கங்கேலா சபையில் தேவனுடைய வார்த்தைகளை பகிர்ந்துகொள்ளவும், பணித்தள அலுவலக தமிழ் ஐக்கிய கூடுகையிலும் தேவனுடைய வார்த்தைகளை பகிர்ந்துகொண்டார்கள். இராஜஸ்தான் ஊழியர் குடும்ப கூடுகையிலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வெளிப்பட்டது. குறிப்பாக அவர்களின் அன்பு மகள் Lydia–வை பணித்தளத்திற்கு போக சிறப்பு பயிற்சிபெற ஆவியானவரின் புதிய அபிஷேகமும், தரிசனமும் பெறும்படியாக வாஞ்சையுடன் விட்டுச்சென்றார்கள். அவர்களுக்காகவும், சபை விசுவாசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

கோவில்பட்டியி–ருந்து சகோ. நேசமணி அவர்களும் அவர்களின் மனைவி சகோதரி. கிரேஸ் அவர்கள் குடும்பமாக வந்து பணித்தளத்தில் ஆகஸ்டு 15 முதல் 23 வரை சபைகள், ஊழியர் கூடுகை, ஊழியர் பயிற்சி மற்றும் Children Project-களை பார்வையிடவும் ஊழியம் செய்யவும் தேவன் கிருபை தந்தார். கர்த்தருக்கு சித்தமானால் செப்டம்பர் மாதம் முதல் பணித்தளத்தில் பணிபுரிய அர்ப்பணித்துள்ளார்கள். அரசு துறையில் பணியாற்றிய நல்ல அனுபவங்களுடன் பணித்தள ஊழியங்களை தாங்கவும், நிறைவேற்றவும் வருகிறார்கள். அவர்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்.

ஆகஸ்டு 15–ம் தேதி தூத்துக்குடியில் நமது தலைமை அலுவலக ஊழியர்கள் குடும்பமாக கூடி தேவனை ஆராதித்து, கர்த்தருடைய வார்த்தைகளை தியானிக்கவும், அர்ப்பணிக்கவும் தேவன் கிருபை தந்தார். தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பீல் மக்கள் இரட்சிப்பிற்காகவும் விசேஷித்த ஜெபவிண்ணப்பங்கள் ஏறெடுக்கப்பட்டது. போதகர். சாலமோன் சென்னையி–ருந்து வந்து சிறப்பு செய்தி வழங்கினார்கள். நானும் என் மனைவி வஹிதாவும் பணித்தள செய்யும், தேவசெய்தியும் பகிர்ந்துகொண்டோம். இறுதி ஜெபவேளையில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக இறங்கினார். ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அனுபவங்களையும், அர்ப்பணிப்பையும் கட்டளையிட்டார்.

ஆகஸ்டு 15–ம் தேதி மாலை 6 மணிக்கு தூத்துக்குடியில் உள்ள புதுக்கோட்டையில் மிஷனெரியை தாங்கும் குடும்பங்களுக்காக புதுக்கோட்டை வட்டார மிஷனெரி தாங்குவோர் ஐக்கியம் மூலமாக ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு மிஷனெரி கூடுகையில் நாங்கள் குடும்பமாக பங்குபெற தேவன் கிருபை தந்தார். தேவனுடைய வார்த்தை மூலமாக தேவன் பங்காளர்களை ஆசீர்வதித்து அபிஷேகித்தார்.

07.08.2009 அன்று மத்தியபிரதேசத்தில் உள்ள 135 சபைகளில் உள்ள மூப்பர்கள் 2,2 பேர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் குடும்பம், குடும்பமாக கட்வாடா என்ற இடத்தில் கூடி தேவனை ஆராதித்து மகிழ்ந்தார்கள். Church Network செயல்படுத்தப்பட்ட ஷாலோம் க–சியா சமித்தி என்று மத்தியபிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட இயக்கமாக மத்தியபிரதேசத்தில் செயல்பட அன்றையதினம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தேவனுடைய வார்த்தை மூலமாக தயார்படுத்தப்படுகிறார்கள். 2010–ம் ஆண்டிற்குள் 200 சபைகளை உருவாக்கவும் மற்றும் 300 கிராமங்களில் கிளை சபைகளை உருவாக்கவும் அர்ப்பணித்து உழைக்க ஒப்புக்கொடுத்துள்ளார்கள். அதற்கு பொறுப்பாக உள்ள சகோ. பால் முனியா, சகோ. மத்தூர் புரியா, சகோ. பூர்சன் புரியா அவர்களுக்காக ஜெபியுங்கள்.

10.08.2009 அன்று மறுபடியும் பத்தேபூரா தாலுகா பகுதியில் நடைபெற்ற பெண்கள் சிறப்பு கூடுகையில் தேவன் அபரிதமாக ஆசீர்வதித்தார். அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். சத்துருவின் கிரியைகள் அழிக்கப்பட்டு விடுதலையை பெற்றார்கள். நோய்கள் சுகமானது. ஆவியானவர்

ஊற்றப்பட்டார். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். அல்லேலூயா!

மேலும் செப்டம்பர் மாதம் முழுவதும் குஜராத், மத்தியபிரதேசம் அனைத்து சபைகளின் மூப்பர்களுக்காக விசேஷித்த கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. சபைகள் ஸ்திரப்பட ஜெபியுங்கள். மேலும் Mission Sunday–2009 ஆயத்தங்களுக்காக ஜெபியுங்கள். இந்நாட்களில் மழை மிகக்குறைவாக உள்ளது. தேவனிடத்தில் மன்றாடி ஜெபியுங்கள். மழையை தேவன்தாமே கட்டளையிட்டு தேசத்தை ஆசீர்வதிக்க, பீல் மக்கள் போஷிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஷாலோம் அற்புதத்தின் நாள்:**

செப்டம்பர் மாதம் 25–ம் தேதி வெள்ளிக்கிழமை 519 கிராம சபைகளிலும் ஷாலோம் அற்புதத்தின்நாள் ஆசரிக்கப்பட உள்ளது. அந்நாளில் தேவன் பல ஆயிரம் அற்புதங்களை சுதேச ஊழியர்கள் மூலம் நடப்பிக்க, அநேக ஆயிர குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள விசேஷமாக ஜெபியுங்கள்.

**வழங்குவோம் வேதபுத்தகங்கள்:**

இரட்சிக்கப்பட்டு வரும் விசுவாசிகள் குடும்பத்திற்கு ஒரு வேதாகமம் மிகக் குறைந்த விலையில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. உங்களுடைய சார்பிலும் ஒரு சில வேதப்புத்தகங்களை வாங்குவதற்கு உதவி செய்யலாம்.

**“வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவே–னிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்– அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்”. (ஏசாயா 45 : 4)**

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# வேதம்... சத்திய வேதம்

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!

ஆண்டவராகிய கர்த்தர் மனுக்குலத்திற்கு கொடுத்த மிகப்பெரிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் ஒன்று வேதப்புத்தகமாகும். மனிதனின் சரீரம் உணவினால் போஷிக்கப்படுகிறதுபோல ஆத்துமா தேவனுடைய வசனத்தினால் போஷிக்கப்படுகிறது. சங்கீதம் 119ம் அதிகாரம் முழுவதும் வாசித்துப் பார்த்தால் சங்கீதக்காரன் வேதத்தைக் குறித்து மிக அழகாக எழுதி வைத்துள்ளான். குறிப்பாக சில வசனங்களைப் பாருங்கள்.

- **கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். (சங்.119 : 1)**
- **வா–பன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே. (சங் 119 : 9)**
- **உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும். (சங் 119 : 18)**
- **எனக்கு உணர்வைத் தாரும்; அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும், அதைக் கைக்கொள்ளுவேன். (சங் 119 : 34)**
- **அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது; நானோ, நம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். (சங் 119 : 70)**
- **அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (சங் 119 : 72)**
- **உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம். (சங் 119 : 97)**
- **உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங் 119 : 105)**
- **உம்முடைய வேதத்தை மனுஷர் காத்துநடவாதபடியால், என் கண்களி–ருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது. (சங் 119 : 136)**
- **உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம். (சங் 119 : 142)**

தாவீது தேவனுடைய வசனங்களை நேசித்து, வாசித்து அதன் வழி நடந்தபடியால் தேவன் அவனை என் இருதயத்திற்கு ஏற்றவன் என்று கூறி ஆவியானவரால் சாட்சி கூறப்பட்டான். மட்டுமல்லாமல் தாவீதோடு கூட கர்த்தர் இருந்து அவனை ஆசீர்வதித்தார். **“தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர்**

**அவனோடேகூட இருந்தார்". (2சாமுவேல் 5:10)** பரிசுத்த வேதாகமம் மனிதனால் ஏவப்பட்டு எழுதப்படவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவினாலே ஏவப்பட்டு எழுதப்பட்டது. (2பேதுரு 1:21, 2 தீமோ. 3:16) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். **"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிக்கொடுக்கிறவைகளும் அவைகளே". (யோவான் 5:39)** வேத வாக்கியங்களை தியானிக்கும்போது நித்திய ஜீவனுக்கு நேராக நம்மை நடத்துகிறது. நாமும் வேதத்தை நேசிப்போம், வாசிப்போம் அதன்படி நடப்போம். வேதம் சொல்லுகிறது **"வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது"(நீதி. 28:9)** நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படவேண்டுமென்றால் நாம் வேதத்தை நேசித்து வாசிக்க வேண்டும். தியானிக்க வேண்டும். தாவீதும் வேதத்தை தியானித்து எப்பொழுதும் ஜெபித்ததைக் காண்கிறோம். ஓசியா தீர்க்கதரிசன புத்தகத்தில் **"நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்".** ஓசியா 4:6. நாம் வேதத்தை மறந்துவிடவும் கூடாது. வாசித்து அதன்படி நடக்கவும் மறந்துவிடக்கூடாது. தாவீது வசனத்தை வாசித்து அதன்படி நடந்தபடியால் அவனை சந்ததி, சந்ததியாய் தேவன் ஆசீர்வதித்தார்.

அப்போஸ்தல நடபடிகளில் 17ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள் பெரோயா பட்டிணத்து விசுவாசிகளைக் குறித்து எழுதப்பட்ட சாட்சியைப் பாருங்கள். **"அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசா–ளாயிருந்தார்கள். அதனால் அவர்களில் அநேகம்பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்". (அப். 17:11,12)** நம் பீல் ஆதிவாசி மக்கள் பேசும் மொழிகள் பீ–, பிலோடி, வாகுடி என்பவையாகும். அவைகளுக்கு எழுத்து வடிவம் இல்லை. வேதபுத்தகமும் இவர்கள் மொழியில் கிடையாது. அவர்கள் மத்தியில் நானும் எனது மனைவி வஹிதாவும் பிரசங்கம் செய்யும்போது இது என்ன கருப்பு புத்தகம் என்று கேட்பார்கள். தேவனுடைய வார்த்தை என்று சொல்லும்போது எங்களுக்கும் ஒரு புத்தகத்தைத் தாருங்கள் என வாஞ்சையுடன் கேட்பார்கள். ஒவ்வொரு வருடமும் நாம் மிக குறைந்த விலைக்கு வேதாகமங்களை வழங்கி வருகிறோம். வேதத்தை வாங்குவது மட்டுமின்றி அதற்கு கவர் வாங்கித் தாருங்கள் என கேட்பார்கள். இந்த வருடமும் நாம் 5000 வேதப்புத்தகங்கள் வேண்டும்.

இவர்கள் வேதத்தை வாசிக்க வேண்டும் என்பதற்காக முதியோர் கல்வித் திட்டம் ஆரம்பித்து 400 மையங்களில் பயிற்சி கொடுக்கிறோம். குறிப்பாக அநேக சுதேச ஊழியர் மனைவிமார்கள் எழுத படிக்க ஆரம்பித்துள்ளார்கள். மூப்பர்கள் எழுத படிக்க ஆரம்பித்துள்ளார்கள். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு வேதத்தை வாசிக்க வேண்டும் என வாஞ்சிக்கிறார்கள். இன்று பள்ளிக்கூடமே போகாத (முதல் வகுப்புகூட) சுதேச ஊழியர் மனைவிமார்கள் வேதத்தின் பல பகுதிகளை வாசித்து மனப்பாடம் செய்துள்ளார்கள். குறிப்பாக கம–பேன் – சந்துபாய், சபிதாபேன் – கண்ணுபாய் இவர்கள் முதல் வகுப்பு கூட படிக்கவில்லை

ஆனால் இன்று யோவான் 15ம் அதிகாரம், சங்கீதம் 19,51,23,1, ஆகிய அதிகாரங்கள் மட்டுமல்லாமல் சங்கீதம் 119ம் அதிகாரத்தையும் மனப்பாடம் செய்து ஒப்பித்துள்ளார்கள். ஆகவேதான் பீல் மக்கள் ஊழியத்தில் ஆத்தும ஆதாயம் மற்றும் அற்புத அடையாளங்கள் நடைபெறுகின்றன.

சமீபத்தில் மத்தியப்பிரதேசத்தில் டிக்கிடி கிராமத்தில் ஊழியரின் மனைவியிடம் பரிசுத்த ஆவியானவர் லூக்கா 13ம் அதிகாரத்தை வாசித்துக் காட்டி அதை செய்தியளிக்கும்படி ஏவியுள்ளார். அந்த சகோதரி அனைவரும் பிரமிக்கத்தக்கதாய் லூக்கா 13ம் ஆதிகாரத்தை செய்தியாக கொடுத்தார். வேதத்திற்கு முத—டம் வாசித்து, நேசித்து நடந்தால் கட்டாயம் எபிரேயர் சபைபோல் நம் சபைகளும் வளரும்.

***<u>விடுவிக்கும் தேவ வல்லமையான தேவ வசனம்</u>***

தேவனுடைய வசனத்தில் வல்லமையுண்டு, அதிகாரம் உண்டு, அபிஷேகம் உண்டு; விடுதலை உண்டு, ஆசீர்வாதம் உண்டு, பாதுகாவல் உண்டு, வாக்குத்தத்தங்களை பிடித்து ஜெபிக்கும்போது தேவன் பதில் தருகிறார். வேதவாக்கியங்கள், வாக்குத்தத்தங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் உள்ளது. வாழ்க்கை பாதையிலும், ஊழிய பாதையிலும் அவருடைய வசனங்களை வாசித்து தியானித்து விசுவாசித்து நடந்தால் தேவன் கட்டாயமாக அற்புதம் செய்வார்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக மத்தியபிரதேசத்தில் நம் பணித்தளத்தி—ருந்து சுமார் 400 கி.மீ தொலைவில் உள்ள குணா மாவட்டத்திற்கு ஊழிய அழைப்பு வந்தபடியால் அங்குள்ள பீல் மக்களை சந்தித்து ஊழியம் செய்ய சென்றோம். வாடகைக்கு ஒரு ஜீப்பை அங்குள்ள சுதேச ஊழியர் ஒழுங்கு செய்திருந்தார். பயங்கரமான பிசாசின் பிடியில், சாபப்பிடியில், பாவத்தின்பிடியி—ருந்து மக்கள் விடுதலை பெற்றார்கள். கூட்டம் முடித்து 70 கி.மீ தொலைவில் உள்ள குணாவிற்கு ரயில் ஏற வந்தோம். எங்கள் ஜீப் ஒரு திருப்பத்தில் தலைகீழாக விழுந்தது. உயிர் பிழைத்தது தேவ கிருபை. என் மனைவி ஜீப்பில் சிக்கி வெளிவரமுடியாமல், பேச மூச்சுதிணறினாள். தேவ கிருபையால் வெளியிலே கொண்டு வந்தோம்.

அந்தக் காட்டுப்பகுதியில் உதவிக்கு யாரும் இல்லை. போக்குவரவு அதிகம் இல்லை. ஒரு ஜீப் வந்தது உதவ மாட்டேன் என்று கூறி சிறிது நேரத்தில் இங்கு கொள்ளையர்கள் வருவார்கள். இருட்டபோகிறது கொடிய விலங்குகளும் வரும் என்று சொல்—விட்டு சென்றுவிட்டார்கள். நான் என் ஊழியர்களுடன் அந்தகாட்டில் வானத்தைப்பார்த்து 121—ம் சங்கீதத்தை மனப்பாடமாக சத்தமாக கூறினேன். முடித்தபிறகு எப்படியோ ஜீப் உடைய முதலாளி கேள்விப்பட்டு பக்கத்து ஊருக்கு தானாக வந்தார். உடனடியாக எங்களுக்கு ஆவன செய்து குணாவிற்கு எங்களை கொண்டு விட்டார். சிலமணி நேரங்களுக்கு பின்பாக அந்த ஒட்டுநர் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டோம்.

எனக்கன்பானவர்களே வேதத்தை வாசித்து, நேசித்து அதன்வழி நடக்கும்போது தாவீதை ஆசீர்வதித்து, பாதுகாத்து, சந்ததியை ஆசீர்வதித்த தேவன் நம்மையும் ஆசீர்வதிப்பார். நம் சபைகளும் ஆசீர்வதிக்கப்பட்டு ஆத்துமாக்கள் பெருகும். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

அறிமுகப்படுத்துகிறோம்...

✝

# SHALOM CHARITY MISSION

## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 18 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக நீண்ட நாட்கள் ஜெபத்திற்குப் பின் மூத்த தலைவர்களின் ஆலோசனையின் பேரில், ஆவியானவரின் வழிநடத்துத–ன்படி **Shalom Charity Mission –** என்ற இயக்கத்தை பதிவு செய்ய தேவன் கிருபை தந்துள்ளார். **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளை கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். **Shalom Charity Mission - Founder & Managing Trustee** ஆக **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். Dr. Mr. Prema Christopher, (Palayamkottai), Mr. Winston Balasingh (Tuticorin), Mr. Jacob (Chennai) ஆகிய மூவரும் **Trustee** களாக பொறுப்பேற்றுள்ளார்கள். Sharing Love Mission Board முழுமையாக இதை ஆதரித்து, செயல்பட அனுமதித்துள்ளது. ஆகவே Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறேன். விரைவில் நமக்கு இந்த சமூக சேவை பணிக்கான 80G கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். மேலும் பிரதிநிதிகளுக்கு ரசீது புத்தகங்கள் அனுப்பப்படுகிறது.

மேலும் இது குறித்து விபரங்களை அறிய எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். சகோதரி வஹிதா தேவதாஸ், Cell : 09327445468, சகோ. சாம் குணசீலன் Cell : 9345675468

வங்கி கணக்கு எண் : **105010100096779**

**SHALOM CHARITY MISSION - Axis Bank - Tuticorin Branch**

# வேதாகமமும் நீங்களும்



- வேதாகமத்தை தலையணைக்கு பக்கத்தில் வைத்துப் படுப்பது பாதுகாப்பைத் தராது. பயத்தையும் போக்காது. இருதயத்தில் தேவனுடைய வார்த்தைகள் ஆளுகை செய்தால்தான் பாதுகாப்பு கிடைக்கும். அதுதான் பயத்தைபோக்கும்.

- வேதாகமத்தை அழகான ஒரு இடத்தில் வைத்து அதற்கு விசேஷ மரியாதை செய்வது பயனற்றது. வேதாகம வார்த்தைகளை தினமும் படித்து, சிந்தித்து, அதன்படி நடப்பதே பலன்தரும்.

- பிசாசு பிடித்தவர்கள் மேல் வேதாகமத்தை வைத்து ஜெபிப்பதால் பிசாசு ஓடிவிடாது. தேவசத்தமும் அதிகாரமும் கலந்து கர்த்தருடைய வார்த்தைகளுக்கு பயந்துதான் பிசாசு ஓடும்.

- வேதாகமத்தை கைப்பையிலோ, பீரோவிலோ வைத்திருப்பதால் ஆசீர்வாதம் வராது. வேத வார்த்தைகளை இருதயத்தில் பதித்தால்தான் ஆசீர்வாதம் வரும்.

- தினமும் எத்தனை அதிகாரங்கள் படிக்கிறோம் என்பது முக்கியமல்ல. எந்த அளவு படித்ததை தியானித்து அதனால் புதிய பாடங்களை கற்கிறோம் என்பதே முக்கியம். எவ்வளவு படித்து முடிக்கிறோம் என்பதல்ல, எவ்வளவு படித்து பின்பற்றுகிறோம் என்பதே முக்கியம்.

- வேதாகமம் படிப்பது என்பது வேறு. வேதாகம சத்தியத்தை அறிவது என்பது வேறு. மூளையின் உதவியினால் வேதாகம போதனைகளை ஆராய்ந்து அறியலாம். தேவ ஆவியின் அனுக்கிரகத்தினால்தான் வேதாகமத்திலுள்ள வேதத்தையும், வேதாகம சத்தியத்தையும் அறிந்துணர முடியும்.

- வேதாகமத்தை அதிகமாகப் படித்தால் வேதவினா போட்டியில் வெற்றிபெற முடியும். வேதாகமத்திற்குள் இருக்கும் வேதத்தை அறிந்து உணர்ந்தால்தான் வாழ்க்கை சோதனைகளில் வெற்றிபெற முடியும்.

- வேதாகம விஷயங்களை ஆராய்ச்சி செய்தால் டாக்டர் பட்டம் பெற முடியும். வேதவசனங்களின்படி தன்னை ஆராய்ந்து அறிந்தால்தான் பரிசுத்தவான் என்ற பதவியைப் பெற முடியும்.

- ஆசீர்வாதம் என்பது தினமும் வேதாகமங்களை படிப்பதற்காக அல்ல. படித்து அறிந்ததின்படி வாழ்கின்றவர்களே ஆசீர்வாதம் பெறுவர்.

- உலகத்தின் எந்த ஒரு புத்தகத்தையும் படித்து அறிந்துகொள்ள அறிவுக்கண்கள் திறக்கப்பட்டால் போதும். ஆனால் திருமறையை படித்து அறியவோ ஆவிக்குரிய கண்கள் கர்த்தரால் திறக்கப்படவேண்டும். வேதாகம சத்தியங்கள் ஒரு வெளிச்சம். இந்த வெளிச்சத்தில், தான் எப்படி என்பதை கண்டறிகிறவன் ஞானியாவான். பிறர் எப்படி என்பதை பார்க்கின்றவர்கள் முட்டாள்கள் ஆவார்கள்.

நன்றி : ஜீவநீரோடை

# ஜெபக் குறிப்புகள்



**பீல் ஆதிவாசி ஜனங்கள்:**

ஒரு கோடி பீல் ஆதிவாசி ஜனங்களும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்....

**கிராம ஆலயங்கள்:**

ஷாலோம் பணித்தளங்களில் 20 கிராமங்களில் ஆலய கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன இதற்காக ஜெபியுங்கள். 20 ஆலயங்களும் எந்த தடையும், பிரச்சனையுமின்றி கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

**சுதேச ஊழியர்கள்:**

தேவன் நமக்கு தந்துள்ள 435 பீல் சுதேச ஊழியர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள்.. சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காக ஜெபியுங்கள். சுதேச ஊழியர்களின் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்கள் தேவனால் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு:**

SHALOM MISSION SUNDAY (ஷாலோம் மிஷன் ஞாயிறு) ஒவ்வொரு வருடமும் நம் விசுவாசிகள் தேவனைத் துதித்து மிஷனெரி பணி தரிசனம் நிறைவேற, அன்று ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களாக கவர் காணிக்கைகளைப் படைப்பார்கள். கடந்த ஆண்டு ரூ. 8 இலட்சம் காணிக்கையை உற்சாகத்துடன் படைத்தார்கள். இந்த ஆண்டும் பீல் விசுவாசிகள் உற்சாகமாய் ஆத்தும பாரத்துடன் காணிக்கைகளைப் படைக்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் அற்புத ஜெபநாள்:**

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 4–வது வெள்ளிக்கிழமையை பரிசுத்த ஆவியானவரின் நடத்துத–ன்படி 'Shalom Miracle Prayer Day' –ஆக ஆசரித்து வருகிறோம். ஒவ்வொரு சபையிலும் அந்தந்த ஊழியர்கள், மூப்பர்கள் விசுவாசிகளுடன் இணைந்து உபவாசித்து ஜெப ஆயத்தத்துடன் "எண்ணெய் பூசி" ஜெபிப்பார்கள். கடந்த ஆண்டில் அனைத்து சபைகளிலுமிருந்தும் கிடைத்த தகவல்களின்படி, ஆயிரக்கணக்கான அற்புதங்களை சாட்சியாகக் கிடைக்கப் பெற்றோம். இவ்வருடமும் குறிப்பாக சரீரத்திலும், ஆத்துமாவிலும் தேவையுள்ள ஜனங்களை விசுவாசிகள் அழைத்துவரவும், தேவன் இதேநாளில் அற்புதங்களைச் செய்து குறைந்தது 2000 குடும்பங்கள் புதிதாக தேவனை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

**சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் பணித்தள வருகை:**

நவம்பர் முதல் வாரத்தில் குஜராத், மேம்தாபாத்தில் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் மூலமாக நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாமிற்காகவும், பணித்தள கிராமங்களில் ஆலய பிரதிஷ்டைகளுக்காகவும், நற்செய்தி கூட்டங்களுக்காகவும் ஊழியர்களின் பிரயாணங்களுக்காகவும் தங்கும் வசதிக்காவும், உணவு வசதிக்காகவும், தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களையும், இயேசு விடுவிக்கிறார் குழுவினர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்த இப்பொழுதிருந்தே ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம்...

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

கர்த்தர் எங்களுடைய வாழ்வில் செய்த அற்புதங்கள் ஏராளம். அவற்றில் சிலவற்றை கர்த்தருடைய நாமம் மகிமையடையும்படியாக உங்களோடு பகிர்ந்துகொள்ளுகிறோம்.

எங்களுக்கு 1994–ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் திருமணமானது முதல் பெங்களூர் பட்டணத்தில் வசித்து வருகிறோம். முத–ல் வாடகைக்கு ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தோம். அப்பொழுது ஷாலோம் ஊழியத்தில் ஒரு மிஷனெரியை தாங்கும்படி, கர்த்தர் எங்களோடு பேசினார். மிகுந்த பிரயாசத்திற்கு பின்பு, ஷாலோம் ஊழியத்தின் முகவரியை கண்டுபிடித்து சகோ. தேவதாஸ் அவர்களை தொடர்பு கொண்டோம். சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் பெங்களூர் வந்து மிஷனெரியையும் பிரதிஷ்டை செய்துவிட்டு, நாங்கள் ஒரு சிறிய வாடகை வீட்டில் வசித்தபடியால் எங்களுக்கு சொந்தமாக ஒரு வீட்டை கர்த்தர் கட்டளையிடும்படியாக ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! இரண்டு வருடங்களுக்குள் நாங்கள் நினைத்ததற்கும், வேண்டிக்கொண்டதற்கும் மேலாக ஒரு பெரிய இடத்தை கொடுத்து அதில் ஒரு நல்ல வீட்டையும் கட்ட கர்த்தர் கிருபை செய்தார். அதன் பின்பு இரண்டாவது மிஷனெரியை தாங்க ஆரம்பித்தோம். கர்த்தர், வேலையில் அதிகமான உயர்வுகளை கட்டளையிட்டார்.

குழந்தை செல்வம் மாத்திரம் தடைபட்டுக்கொண்டே வந்தது. நாங்கள் சோர்ந்துபோகும்போதெல்லாம் கர்த்தர் எங்களை அதிகமாய் தாங்கினார். சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் அதிகமாய் எங்களுக்காக ஜெபித்து விசுவாசத்தில் உறுதியாய் நிற்கும்படியாக எங்களை உற்சாகப்படுத்தினார்கள். நாங்களும் குழந்தை அற்றவருக்கு வேதத்தில் தேவன் எப்படி வாக்குத்தத்தத்தை கொடுத்து ஆசீர்வதித்தார் என்பதை எழுதிவைத்து ஜெபித்துவந்தோம். குறிப்பாக ஆபிரகாம் – சாராள், ஈசாக்கு – ரெபேக்காள், யாக்கோபு – ராகேல், மனோவா, அன்னாள், சகரியா – எ–சபெத் போன்றோரை ஆசீர்வதித்ததுபோல எங்களுக்கும் ஆண்டவர் அற்புதம் செய்வார் என்று விசுவாசித்து காத்திருந்தோம்.

2000 –ம் வருடத்தில் கர்த்தர் ஒரு வாக்குத்தத்தத்தை கொடுத்தார். ஏசாயா.29: 22,23 வசனங்கள். **இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை. இனி அவன் முகம் செத்துப்போனதுமில்லை. அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளைகளை தன் நடுவில் காணும்போது என் நாமத்தை பரிசுத்தப்படுத்துவார்கள். யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி இஸ்ரவே–ன் தேவனுக்கு பயப்படுவார்கள்.** இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்து அது நிறைவேறக் காத்திருந்தோம். ஆனாலும் சில Abortions ஆனதினிமித்தம் சோர்ந்துபோனபோது ஆண்டவரே ஏன் இந்த நெருக்கம் என்று கேட்டோம். அப்பொழுது மத்.7 : 13,14 வசனங்கள் மூலமாய் பேசினார்.

தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருக்கும்போது கடந்த 2007–ம் வருடம் நவம்பர் மாதம் 24–ம் தேதி தேவன் திட்டமும் தெளிவுமாய் பேசினார். **“நான் கொடுத்த வாக்குத்தத்தத்தை**

**நிச்சயமாய் நிறைவேற்றுவேன். அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு. உன்னை சாட்சியாக வைப்பேன்"** என்றார். தேவன் தாம் சொன்னபடி கடந்த 2008–ம் ஆண்டு செப்டம்பர் 24–ம் நாள் Reenie Mirable என்ற அழகிய பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். இன்று அநேகருக்கு ஆறுத–ன் பாத்திரமாக மாற்றியிருக்கிறார். ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறி செல்லும்படி செய்திருக்கிறார்.

**"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்". அவருக்கே எல்லா மகிமையையும், கனத்தையும் செலுத்துகிறோம்.**

– **ரஜீவன்லால்**, பெங்களூர்



சகோ. ரஜீவன்லால் அவர்கள் குடும்பம்



ரஜீவன்லால் அவர்களுக்கு தேவன் தந்த இல்லம்

---

## *வேதாகமமும் அலைப்பேசியும்*

### செல்போனுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை நாம், நமது வேதாகமத்துக்கு கொடுக்கிறோமா?

*இதோ சில ஆலோசனைகள்......*

✞ நாம் செல்லுமிடமெங்கும் அதை எமது கைப்பையில் அல்லது சட்டைப்பையில் எடுத்துச்சென்றால் என்ன?

✞ ஒரு நாளில் அதிக தடவை அதை உபயோகித்தால் என்ன?

✞ அது இன்றி வாழமுடியாது என்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டால் என்ன?

✞ மற்றவர்களுக்கு அதை பரிசாகக் கொடுத்தால் என்ன?

✞ பிரயாணம் பண்ணும்போது அதை பாவித்தால் என்ன?

✞ ஆபத்தானதும் அவசரமுமான நேரத்தில் எப்படிப் பாவிப்பதென்று கற்றுக்கொடுத்தால் என்ன?

✞ எம் அயலவருக்கு அதை எப்படிப் பாவிப்பதென்று கற்றுக்கொடுத்தால் என்ன?

✞ குறிப்பு : செல்போனை பாவித்து, அதற்கு உரிய கட்டணத்தை செலுத்தாவிட்டால் தொடர்பு துண்டிக்கப்படும். ஆனால் வேதாகமத்தை அதிகமாக பாவிப்பதினால், நமக்கும் நமது ஆண்டவருக்கும் இடையே உள்ள உறவு அதிகரிக்கும்.

✞ அது சரிதான், உங்களுடைய பரிசுத்த வேதாகமம்தான் எங்கே?

**நன்றி: சத்திய வசனம்**

# பணித்தளங்களில் ஆவியானவரின் மகத்தான கிரியைகளில் ஒரு சில...

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இயேசுகிறிஸ்துவின் பெயரை ஒருமுறை கூட கேள்விப்படாதவளாயிருந்தேன். கடந்த ஒரு வருடமாக, எனது வலது கை செயல் இழந்து போய் உணர்வற்று அசைக்கமுடியாமல், உயர்த்த முடியாமல் இருந்தேன். இதனால் என்னால் ப்பிளவுஸ் அணிய முடியாது. இந்த பெலவீனத்தி–ருந்து விடுதலை பெற எத்தனையோ மந்திரவாதிகளிடம் சென்று கோழி, ஆடுகளை ப– செலுத்தினோம், மட்டுமல்லாமல் மந்திரவாதிகள் இரும்பு கம்பியை காயவைத்து, எனது வலது கையில் சூடு போட்டனர். எனினும் கொஞ்சமும் சுகம் கிடைக்கவில்லை. கடைசியில் மர்கலாவைச் சேர்ந்த ஷாலோம் ஊழியரை சந்தித்து ஜெபித்தேன். பின்னர் அவர் எனது வீட்டிற்கு வந்து இயேசுவைக் குறித்து கூறி ஜெபித்தார். பின்பு ஹட்மத் என்ற கிராமத்தில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் மூலம் நடைபெற்ற பெண்கள் கூட்டத்தில் பங்கு பெற்றேன். கூட்டத்தில் ஆராதனை வேளையிலும், ஜெப வேளையிலும் தேவ ஆவியானவர் என் மீது இறங்கிவந்தார். ஒரு வருடமாக அசைக்கமுடியால் இருந்த எனது கை செயல்பட ஆரம்பித்தது. விசுவாசத்துடன் சபைக்கு நான் ப்பிளவுஸ் கொண்டு வந்திருந்தேன். தேவன் எனது விசுவாசத்தைக் கனப்படுத்தி ப்பிளவுஸை போட்டு தேவனை மகிமைப்படுத்த கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

– **ஷன்காரியா பேன்,** (வயது:55) மார்கலா கிராமம், குஜராத்

---

நான் 70 வயதான முதியவன். எனது வாழ்க்கையில் இதுவரையில் குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகவும் வேதனையுடன் வாழ்ந்து வந்தேன். நான் எனது 70 வயதிற்குள்ளாக எட்டுப் பெண்களைத் திருமணம் செய்தேன். (பீல் கலாச்சாரத்தின்படி) ஆனால் அனைவரும் குழந்தை பாக்கியம் இல்லாத காரணத்தால் என்னை விட்டு போய்விட்டார்கள். இறுதியாக சுகிலா என்ற பெண்ணை (வயது:40) திருமணம் செய்தேன். இந்நிலையில் எனது கிராமத்திலுள்ள ஷாலோம் சுதேச ஊழியர் ராம்சிங் டாமோர் மூலமாக 2008ம் ஆண்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டோம். ஊழியர் எனக்கும் எனது மனைவிக்கும் "ஆபிரகாம் தனது 100வது வயதில் குழந்தை பாக்கியத்தைப் பெற்ற காரியங்களைக் கூறி விசுவாசத்தில் பெலப்படுத்தி, கர்த்தர் உனக்குக் கண்டிப்பாக குழந்தை பாக்கியத்தைக் கொடுப்பார்" எனக்கூறி ஜெபித்தார். கர்த்தர் தனது ஊழியரின் வார்த்தையைக் கனப்படுத்தி, அதே மாதத்தில் குழந்தை உண்டாக கிருபை செய்தார். இந்த ஆண்டு ஜுலை மாதத்தில் எனது மனைவி அழகான ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்த குழந்தைக்கு ஈசாக்கு என பெயரிட்டுள்ளோம். என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இதைப் பார்த்த எனது கிராம ஜனங்கள் இயேசு அற்புதம் செய்கிறார் என்பதை விசுவாசிக்கின்றனர். கர்த்தர் செய்த இந்த மகத்தான அற்புதத்தைப் பார்க்கும்போது அன்று ஆபிரகாமுக்கு அற்புதம் செய்த தேவன் இன்றும் நம் மத்தியில் ஜீவிக்கிறவராயிருக்கிறார். தேவனுக்கே மகிமை!

– **கல்லுபாய் கேத்தாயி டாமோர்,** (வயது:70) –ம்பாகேடி, குஜராத்

# பணித்தளங்களில் நடைபெற்ற அற்புதங்களில் ஒரு சில....





கடந்த ஒரு வருடமாக வாத நோயினால் கைகளைத் உயர்த்தக் கூட முடியாத நிலையில் இருந்த சகோதரிக்கு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.





தேவனுடைய பெரிதான கிருபையினால் சுதேச ஊழியரின் ஜெபத்தின் மூலம் பணித்தளத்தில் வயதான தம்பதியருக்கு குழந்தை பிறந்துள்ளது.



குஜராத் பணித்தளத்திற்கு இசைக்கருவி (Key Board) தேவை என்பதை நமது அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரில் தெரியப்படுத்தியிருந்தோம். அதை வாசித்த இரண்டு குடும்பத்தார் உதாரத்துவமான காணிக்கை அனுப்பினார்கள். ரூ. 45,250/- மதிப்பில் இசைக்கருவி வாங்குவதற்கு தேவன் கிருபை செய்தார். தேவன்தாமே அந்த இரண்டு குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பாராக!

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமத் திட்டம்





முந்தைய ஆண்டுகளில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வழங்கிய வேதப்புத்தகங்கள்









28.06.2009 அன்று குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **"சிறப்பு விருது"** வழங்குதல்

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 12 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **"சிறப்பு விருது"** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள் இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக இன்னும் 5000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்படுகிறது. ஆகவே இந்தத் திட்டத்திற்காக (5000 X ரூ. 80) ரூ. 4,00,000/– தேவைப்படுகிறது. இந்த நிதித் தேவை சந்திக்கப்படும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்க சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவதிட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## ஷாலோம் பக்தி மண்டலி (Shalom Bakthi Mandali)

குஜராத் – 20.07.2009






## ஷாலோம் கலிசியா சுமித்தி (Shalom Kalisiya Samithy)

மத்தியப்பிரதேசம் – 07.08.2009






## *பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில்*

## கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை நோக்கி....

1991–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நற்செய்தி பணியில் தேவன் படிப்படியாக வளர்ச்சியைத் தந்து அவர் தமது சித்தத்தை நிறைவேற்றி வருகிறார். ஊழியங்கள் வளர வளர பீல் விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், சமுதாயத்தில் அவர்கள் முன்னேறவும் சபை ஒழுங்கு, நியமங்கள் போன்ற பல காரியங்களை ஜெபத்துடன் செய்து வருகிறோம்.

எங்கள் காலங்கள் முடிவதற்கு முன்பாக உத்தமமான தலைமைத்துவத்தையும் உக்கிராணத்துவ பொறுப்பையும் பீல் ஆதிவாசி ஊழியர்களுக்கு கற்றுக்கொடுக்க தேவன் எங்களுக்கு பாரம் தந்துள்ளார். இது மிகவும் கடினமான ஒன்றாகும். தேவ ஒத்தாசையினால் தேவசித்தத்தை பீல் மக்கள் மத்தியில் நிறைவேற்றுகிறோம். ஆகவே மூன்று மாநிலங்களில் கீழ்க்கண்ட பெயர்களில் அரசாங்கத்தில் பதிவு செய்துள்ளோம்.

1. **ஷாலோம் பக்தி மண்ட–** – குஜராத்
2. **ஷாலோம் பக்தி மண்ட–** – மத்தியபிரதேசம்
3. **ஷாலோம் சன்ஸ்தா** – இராஜஸ்தான்

இந்த ஸ்தாபனங்களில் நாங்கள் அங்கத்தினர் கிடையாது. சுதேச ஊழியர்களே பொறுப்பேற்று நடத்துகிறார்கள். ஆனால் பின்னாக நின்று Sharing Love Mission மூலமாக ஜெபம், ஆதரவு, ஆலோசனை பயிற்சிகளை தொடர்ந்து கொடுத்து வருகிறோம். ஜெபியுங்கள். புதிய தலைமுறை, கிறிஸ்துவின் தலைவராகிறார்கள். அதன்படி 20.07.2009 அன்று குஜராத் **ஷாலோம் பக்தி மண்ட–க்கென்று** விசேஷித்த ஆலோசனை மற்றும் திட்டக் கூட்டம் நடைபெற்றது. இதில் குஜராத்திலுள்ள 120 சபை ஊழியர்கள் குடும்பமாகவும், ஒவ்வொரு சபையி–ருந்து 2 , 2 மூப்பர்களும் பங்குபெற்று பல ஆலோசனைகளை பெற்றுக்கொண்டார்கள். மேலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதைப்போன்று மத்தியப்பிரதேசம் **ஷாலோம் க–சியா சமித்தி** 07.08.2009 அன்று ஆலோசனை மற்றும் திட்டக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நம்முடைய 135 சபையிலுள்ள ஊழியர்கள் குடும்பமும், மூப்பர்களும் பங்குபெற்று சபைக்கான நியமங்கள் மற்றும் திட்டங்களை நிறைவேற்ற தங்களை அர்ப்பணித்தார்கள். இதற்காக நீங்கள் பாரத்தோடு ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம்.

# இயேசு கிறிஸ்துவும் யோசேப்பும்

| இயேசு கிறிஸ்து | யோசேப்பு |
|---|---|
| 1. இயேசு பிதாவின் நேசக் குமாரன். மத் 3 : 17 (இயேசு: பிதாவின் நேசகுமாரன் என்று ஏழுதடவை எழுதப்பட்டிருக்கிறது. மத்.3:17, 17:5, மாற்கு 1:11, 9:7 | 1. யோசேப்பு பிதாவின் (யாக்கோபு) நேசகுமாரன். ஆதி 37:4 |
| 2. இயேசு பிதாவினால் சொந்த ஜனமாகிய யூதர்களிடத்தில் அனுப்பப்பட்டார். யோவான் 1 : 11 | 2. யோசேப்பு தன் பிதாவினால் சகோதரரிடத்தில் அனுப்பப்பட்டான். ஆதி 37 : 13 |
| 3. இயேசு யூதர்களால் புறக்கணிக்கப்பட்டார். யோவான்1:11, மாற்கு 6:3,4 | 3. யோசேப்பு தன் சகோதரர்களால் புறக்கணிக்கப்பட்டான். ஆதி. 37 : 18 |
| 4. இயேசு தன் சீஷனாகிய யூதாஸ்காரியோத்தினால் 30 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டார் மத் 26:14 – 16 | 4. யோசேப்பு தன் சகோதரர்களால் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். ஆதி 37 : 26 – 28 |
| 5. இயேசுவின்மேல் வேதபாரகர், பரிசேயர், பிரதான ஆசாரியர்கள் அநியாயமாகக் குற்றம் சுமத்தினார்கள். மத் 27 : 12 | 5. யோசேப்பைச் சொந்த சகோதரர்கள் அநியாயமாகக் குற்றம் சுமத்தினார்கள். ஆதி. 37 :20 |
| 6. இயேசுவைக் கொலை செய்ய அநேகமுறை வகைதேடினார்கள். மத். 2:16–20, | 6. யோசேப்பைக் கொலை செய்ய வகை தேடினார்கள். ஆதி. 37:18,19 |
| 7. இயேசுவின் தைய–ல்லாத அங்கியைப் போர்ச்சேவகர் கழற்றினார்கள். யோவான் 19:23, 24 | 7. யோசேப்பின் பலவருணமான அங்கியைக் கழற்றினார்கள். ஆதி. 37 : 23,24 |
| 8. இயேசுவுக்குச் சிவப்பான அங்கியை உடுத்தினர். மாற்கு 16 :17–20 | 8. யோசேப்பின் அங்கியை ஆட்டுக்கடாவின் இரத்தத்தில் தோய்த்தார்கள். ஆதி. 37 : 31 – 33 |
| 9. இயேசு புதிய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டார். போர்ச்சேவகர் காவல் காத்தார்கள். மத் 27:60–66 | 9. யோசேப்பு காவல் கிடங்குகளில் (சிறைச்சாலையில்) அடைக்கப்பட்டார். ஆதி. 39:20,121; சங் 105: 17–20 |

| | |
|---|---|
| 10. இயேசு வரும் காரியங்களைத் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தார். | 10. யோசேப்பு ஞானதிருஷ்டியினால் வரப்போகிற காரியங்களை முன்னறிவித்தான். |
| 11. இயேசுவும் முற்றிலும் அழகுள்ளவர். உன் 5:9–16; சங். 45:2; | 11. யோசேப்பு அழகுள்ளவன். ஆதி 39 :6 |
| 12. இயேசுவோடு கூட கர்த்தர் இருந்தார். யோவான்.8:29; 16:32; அப்.10:38 | 12. யோசேப்போடே கூட கர்த்தர் இருந்தார். ஆதி 39 :2,3,21 |
| 13. இயேசு அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். பி–.2:7; எபி.2:14,15 | 13. யோசேப்பு அடிமையாயிருந்தான். ஆதி 37:38; 39:1 |
| 14. இயேசு பாவத்துக்கும், பாவிகளுக்கும் விலகியிருந்தார். எபி.7:26; | 14. யோசேப்பு பாவத்திற்கு விலகி ஓடினான். ஆதி 39:7–13. |
| 15. இயேசு கல்லறையி–ருந்து உயிர்த்தெழுந்து பரலோக சிங்காசனத்தில் உயர்த்தப்பட்டார். எபே.4:8–10; சங் 68:18; எபி.10:24; பி– 2:9,10 | 15. யோசேப்பு சிறைச்சாலையி–ருந்து சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார். எபே. 4:8–10; சங். 68:18; எபி. 10:24; பி–.2 :9,10 |
| 16. இயேசு பரலோக சிங்காசனத்தி–ருந்து ஆவிக்குரிய பசியோடு வருகிறவர்களுக்கு ஜீவ மன்னாவை (பரிசுத்த ஆவி) கொடுக்கிறார். எபே.4:8, யோவான் 7 : 37,38 | 16.யோசேப்பு சிங்காசனத்தி–ருக்கும்போது பசியோடு தேடிவந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். ஆதி.41:57 |
| 17. இயேசு புற ஜாதியி–ருந்தும் தமக்கு மணவாட்டியை தேர்ந்தெடுக்கிறார். 2கொரி. 11:2,3 | 17. யோசேப்பு புறஜாதி மனைவியை விவாகம் செய்தான். ஆதி. 41:45 |
| 18. சபை (மணவாட்டி) எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, யூத ஜாதி மகா உபத்திரவத்தின் மூலம் (பஞ்சத்தினாலும்) கிறிஸ்துவிடம் வந்து அவரை வணங்குவார்கள். சகரி. 12:10; வெளி. 1:7 | 18. யோசேப்பு மணவாட்டியை எடுத்தப்பின் தன் சொந்த சகோதரர்கள் பஞ்சத்தினால் யோசேப்பிடம் வந்து அவனை வணங்கினார்கள். ஆதி. 42:5,6 |
| 19. யூதர்கள் கிறிஸ்துவைக் குறித்து சாட்சிக்கொடுப்பார்கள். வெளி.12:17 | 19. யோசேப்பின் சகோதரர்கள் அவரைக் குறித்து சாட்சி கொடுத்தார்கள். ஆதி.45:26 |
| 20. இயேசு கிறிஸ்து யூதர்களை மகா உபத்திரவத்தி–ருந்தும், பஞ்சத்தி–ருந்தும் விடுவித்து எருசலேமில் தமது ராஜ்யத்தில் சமாதானமாக குடியிருக்கப்பண்ணுவார். எசே. 37 : 14; லூக் 1:31–33 | 20. யோசேப்பு தன் சகோதரரை மகா கொடிய பஞ்சத்தி–ருந்தும், கஷ்டங்களி–ருந்தும் விடுவித்து (இரட்சித்து) கோசேன் நாட்டில் குடியிருக்கப்பண்ணினான். ஆதி.46:34 |
| 21. இயேசு நல்ல கனிதரும் மெய்யான திராட்சச் செடி. யாவருக்கும் நன்மை செய்கிறவராகவே கனி கொடுத்துச் சுற்றித்திரிந்தார். ஆவியின் கனி நிறைந்தவராகவே காணப்பட்டார். யோவான் 15–ம் அதிகாரம். கலா.5:22,23 | 21. யோசேப்பு நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி. ஆதி.49:22,23 |

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. சாகன் பார்கி** **மத்வா (குஜராத்)**

ஹினாபேன் என்ற 3 வயது சிறுமிக்கு இடுப்பிற்கு கீழ் செயல்படாமல் இருந்தது. குடும்பத்தில் அதிக வேதனைப்பட்டார்கள். விசுவாசித்து ஆலயத்திற்கு கொண்டு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார்.

**சகோ. ஹேம்சந் மாவி** **போர்கேடா (குஜராத்)**

பாபுபாய் என்ற 35 வயது சகோதரருக்கு 5 வருடமாக சரீரம் முழுவதும் வெண்மை நிறமாக மாறிவிட்டது. இதனால் இவர் வெளியே செல்ல முடியாமல் கஷ்டப்பட்டார். சபை விசுவாசி இயேசுவை பற்றி கூறி ஆலயத்திற்கு அழைத்து வந்தார். சபை மூப்பர்களோடு சேர்ந்து ஜெபித்தபோது விடுதலை கிடைத்தது.

**சகோ. மங்குபுரியா** **பட்டன்பூரா (குஜராத்)**

காந்தாபேன் என்ற 25 வயது சகோதரியின் மார்பில் கட்டி ஏற்பட்டு அதிக துர்நாற்றம் எடுக்க ஆரம்பித்தது. மருத்துவமனைக்கு சென்று மருந்துகள் சாப்பிட்டும் எந்த பலனுமில்லை. விசுவாசத்தோடு ஆலயத்திற்கு வந்து ஊழியக்காரரிடம் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார்.

**சகோ. நட்வர்லால் D. டாமோர்** **ஜாபர்பூரா (குஜராத்)**

மனிஷ்பாய் என்ற 17 வயது சகோதரர் நெஞ்சு வ–யினால் அதிக கஷ்டப்பட்டார். மருந்துகள் சாப்பிட்டும் எந்த பலனுமில்லை. இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் சுகத்தைத் தந்தார்

**சகோ. ரமேஷ் C. மேடா** **ராசரடா (குஜராத்)**

கரேடி கிராமத்தைச் சேர்ந்த 35 வயது புனிபேன் என்ற சகோதரிக்கு திருமணமாகி 20 வருடங்களாகியும் குழந்தை செல்வம் இல்லை. அதிக பணம் செலவழித்து மந்திரங்கள் செய்தும் எந்த பலனுமில்லை. 2 வருடமாக ஆலயத்திற்கு வந்து அர்ப்பணித்து ஜெபித்தார். தேவன் ஒரு பெண் குழந்தையை தந்து ஆசீர்வதித்தார்.

**கோ. வீர்சிங் பாரியா** **தார்மி (குஜராத்)**

உர்மிளாபேன் என்ற சகோதரி 9 வருடங்களாக பிசாசின் பிடியினால் சிக்குண்டு நெஞ்சு பகுதியில் வீக்கம் , கை, கால்களில் வ– மற்றும் அடிக்கடி அபாஷன் ஆகி விடுகிறது. இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜெபித்ததில் பிசாசின் பிடியி–ருந்து விடுதலை கிடைத்ததுமன்றி இப்போது இவர் 7 மாத கர்ப்பிணியாக இருக்கிறார்

**சகோ. அம்பாலால் கட்டாரா** **பால் (இராஜஸ்தான்)**

ரமிளாபேன் என்ற சகோதரி பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு சென்றார்கள். குழந்தை இறந்துவிட்டது. தாய் மரித்த நிலையில் இருந்தார்கள். விசுவாசத்தோடு அனைவரும் ஜெபித்தனர். தாய் உயிர் பிழைக்க தேவன் உதவிச் செய்தார்.

**சகோ. அஸிஸ் மச்சார்** **காடுளி (இராஜஸ்தான்)**

கவிகேஷ்பாய் என்ற சகோதரர் இருமல், நெஞ்சில் அடைப்பு இவற்றால் கஷ்டப்பட்டார். இரும–ன்போது இரத்தமும் சேர்ந்து வரும். மந்திரவாதிகளிடம் அழைத்து சென்றும் எந்த பலனுமில்லை. ஆலயத்திற்கு வந்து விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. புரா டாமோர்** **சியாசாத் (இராஜஸ்தான்)**

சியாசாத் கிராமத்தைச் சேர்ந்த மங்குபாய் என்ற சகோதரரின் 2 மகன்களும் நோய்வாய்பட்டு மரண படுக்கையில் இருந்தார்கள். ரூ. 5000 செலவு செய்து பார்த்தும் எந்த பலனுமில்லை. ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு ஜெபித்தபோது தேவன் 2பேருக்கும் ஜீவனைத் தந்தார்.

**சகோ. ஹிராலால் கட்டாரா** **பட்லா (இராஜஸ்தான்)**

ஹகுபாய் என்ற சகோதரியின் மகளை பாம்பு கடித்துவிட்டது. விசுவாசத்துடன் கூடி ஜெபித்தபோது தேவன் பாம்பின் விஷம் இறங்கும்படி கிருபை செய்தார்.

**சகோ. ஹிர்ஜி பாண்டா** **பாடலா (இராஜஸ்தான்)**

கலாபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியினால் நடக்கமுடியாமல் அதிக கஷ்டப்பட்டார். 2 பேர் தூக்கிக்கொண்டு ஆலயத்திற்கு வந்தார்கள். ஜெப எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. காந்திலால் பாபோர்** **நகாரி (இராஜஸ்தான்)**

விஜய்சிங்பாய் என்ற சகோதரரின் 1 வயது குழந்தை வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கும்போது திடீரென்று கிணற்றில் விழுந்துவிட்டது. குழந்தையின் தாய் குழந்தை கிணற்றில் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். குழந்தையை வெளியே எடுத்தபோது இறந்து விட்டது. குடும்பமாக விசுவாசத்துடன் ஜெபித்துவிட்டு ஊழியரிடம் ஜெபிக்க கொண்டு வந்தார்கள். ஊழியர் ஜெபித்தபோது தேவன் குழந்தையின் உயிரை திரும்பத் தந்தார்.

**சகோ. ரமேஷ் K. கட்டாரா** **தும்மட் (இராஜஸ்தான்)**

சீதாபேன் என்ற சகோதரிக்கு திருமணமாகி சிறிது நாட்கள் கழித்து இவருடைய கணவர் சாராயத்திற்கு அடிமையானார். இதனால் குடும்பத்தில் சமாதானமின்றி காணப்பட்டார்கள். கணவருக்காக ஊக்கமாக ஜெபித்தோம். தேவன் ஜெபத்தை கேட்டு குடிப்பழக்கத்தி–ருந்து விடுதலை கொடுத்தார்.

**சகோ. சந்து டாமோர்** **சந்தா (மத்தியப்பிரதேசம்)**

மடியாபாய் என்ற சகோதரரை 7 பிசாசு பிடித்திருந்தது. இதனால் இவருடைய வாழ்க்கை மிகவும் மோசமான நிலமையில் காணப்பட்டது. எத்தனையோ இடங்களுக்கு கொண்டு சென்றும் எந்த விடுதலையும் இல்லை. ஆலயத்திற்கு வந்து விசுவாசத்துடன் ஜெபித்ததில் தேவன் விடுதலையை தந்தார்.

**சகோ. ஜோகு டின்டோ** **பேருகட் (மத்தியப்பிரதேசம்)**

கோவாபாய் என்ற சகோதரரின் தலை பகுதியில் கட்டி இருந்தது. மருத்துவர்கள் கட்டியை நீக்குவதற்கு ஆப்பரேஷன் செய்யவேண்டும் என்று கூறினார்கள். இவரிடம் பணம் இல்லாத காரணத்தினால் ஆப்ரேஷன் செய்யவில்லை. ஒரு சகோதரர் இவரை ஜெபிப்பதற்காக ஆலயத்திற்கு அழைத்து வந்தார். ஊழியர் தலையில் கை வைத்து ஜெபித்தார். சில நாட்களிலே தேவன் தலையிலுள்ள கட்டி நீங்கும்படி செய்தார்.

**சகோ. பால் முனியா** **குட்டாயா (மத்தியப்பிரதேசம்)**

மங்களாபாய் என்ற சகோதரரை இரவில் பாம்பு கடித்துவிட்டது. மருத்துவமனைக்கு செல்ல முடியாத நிலைமையில் அனைவரும் சேர்ந்து விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. ராமு டாமோர்** **கோபால்புரா (மத்தியப்பிரதேசம்)**

கவிபேன் என்ற சகோதரிக்கு 2 குழந்தை பிறந்து இறந்துவிட்டது. குழந்தைக்காக ஜெபிக்க வந்தார்கள். ஜெபித்தபோது குழந்தையை தந்து ஆசீர்வதித்தார். அந்த குழந்தை பிறந்ததும் அதிகமாக வாந்தி எடுத்துக்கொண்டேயிருந்தது. ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார்.

**சகோ. ரத்தன்சிங் பட்வேரா** **ஹரிநகர் (மத்தியப்பிரதேசம்)**

தேவ்கா கிராமத்தை சேர்ந்த பிஜியாபாய் என்ற சகோதரரின் வீட்டில் 3 வருடங்களாக பிசாசின் தொல்லை இருந்தது. இரவில் சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். மந்திரவாதிகளிடம் சென்று அநேக மந்திரங்கள் செய்தும் எந்த விடுதலை இல்லை. ஆலயத்திற்கு வந்து விசுவாசத்தோடு ஜெபித்து, ஜெபத் தண்ணீரை வீட்டில் தெளித்து ஜெபித்ததும் பிசாசின் கட்டுகளி–ருந்து தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார்.

**சகோ. மால்சிங் கராசியா** **வாட்டா (மத்தியப்பிரதேசம்)**

மல்சிங்பாய் என்ற 45 வயது சகோதரருக்கு 2 முறை பேதி ஏற்பட்டு தாகோத் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் இவருடைய 2 கிட்னிகளும் வேலை செய்யாது என்று கூறிவிட்டார்கள். சிறுநீர் கழிப்பதற்கும் இவர் அதிகம் கஷ்டப்பட்டார். நான் போய் அவர்களுக்காக ஜெபித்தேன். ஜெபத்தின் மூலமும், மருந்துகள் மூலமும் இவருக்கு விடுதலை கிடைத்தது.



# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# பில் பிரைட்

மிஷனெரி முன்னோடிகள்



பில் பிரைட் அமெரிக்காவில் ஒக்லஹாமா மாநிலத்தில் கவட்டா என்ற இடத்தில் 1921ஆம் ஆண்டு பிறந்தார். கல்வியிலும் மற்றக் கலைகளிலும் சிறந்து விளங்கினார். இந்தக் கவட்டா என்கிற இடத்திலே 54 ஆண்டுகள் தன் வாழ்வின் அருமைத்துணையாய் இருந்த தன் மனைவி வேனட் ஜகாரியைக் கண்டு கொண்டார். 1944ஆம் ஆண்டில் ஒக்லஹாமாவின் நார்த் ஈஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில், சிறப்பான முறையில் பட்டம் பெற்றபின், பில்பிரைட் கலிபோர்னியாவின் தெற்குப் பகுதியல் பிரைட் கலிபோர்னியா கன்பெக்ஷனஸ் என்ற சாக்லெட் தொழிற்சாலையை நிறுவினார். வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டே பிரின்ஸ்டன், ஃபுல்லர் இறையியல் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்த வேளையில் தானே 1951ல் வளர்ந்து வரும் தன் சாக்லெட் தொழிற்சாலை பணியை விட்டு விட்டு, **“நீங்கள் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்”** (மத்தேயு 28:19) என்கிற தேவ கட்டளையை ஏகமாக தழுவிக்கொண்டார்.

அதே ஆண்டில் (1951) அவரும் வேனெட்டுமாக யுனிவர்சிட்டி ஆப் கலிபோர்னியா, லாஸ் ஏஞ்சல்ஸ்–யுக்லா (UCLA) என்ற பல்கலைகழகத்தில் கேம்பஸ் குருசேட் ஊழியத்தைத் தோற்றுவித்தனர். பிரைட் அவர்களின் தலைமையில் இந்த ஊழியமானது எத்திக்கிலும் பரவி வளர்ந்து, உலகெங்கிலும் திரளான கல்லூரிகளில் வேர்விட்டு வளர ஆரம்பித்தது. மாணவர்களோடு மட்டும் நின்றுவிடாமல், சமுதாயத்தின் மற்ற மக்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும் வகையில் பல்வேறு கிளை ஊழியங்களுடன் வளர ஆரம்பித்தது. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம் மற்றும் கிடைக்கக்கூடியதாக இருந்த அனைத்துத் தொலை தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி கிறிஸ்துவின் நற்செய்தியை உலகெங்கும் பரவ உதவினார். கிறிஸ்துவுக்காக மாபெரும் கூட்டங்களை நடத்துபவராகவும் இருந்தார். 1980ல் தென்கொரியாவில் நடைபெற்ற உலக சுவிசேஷ மயமாக்கல் கூட்டத்தில் 20 முதல் 30 இலட்சம் வரை மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். 1989ல் அவர் அநேக நாட்களாக கனவு கண்டு கொண்டிருந்த சோவியத் யூனியன் வாசல் திறக்கப்பட்டது. தங்கள் அரசாங்கத்தின் நாத்திகக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டிருந்த ரஷ்ய மக்களுக்காக 40 ஆண்டுகளுக்கு மேலாக அவர் ஜெபித்ததுண்டு. பின்னர் ஆயிரக்கணக்கான ரஷ்யாவின் ஆசிரியர்களுக்கு


கிறிஸ்தவ அடிப்படையிலான நெறிகளிலும், ஒழுக்கக் கோட்பாடுகளிலும் பயிற்சி அளிப்பதற்கு தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

சமயப்பணியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவோருக்கு டெம்பிள்டன் விருது 1996ல் பிரைட்டுக்குக் கொடுக்கப்பட்டது. இதிலுள்ள பரிசுத்தொகையான 5 கோடி ரூபாயையும் உபவாசத்தையும் ஜெபத்தையும் ஊக்குவிக்கும் பொருட்டே செலவிட்டார். ஏறத்தாழ 60க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவர் கேம்பஸ் குருசேட் ஊழியத்தை எப்பொழுதும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாகிய ஒரு கிளையின் கொடியிலே உள்ள ஓர் இலை தான் என்று தேவனுடைய செயல்பாட்டை தாழ்மையுடன் கூறுவதுண்டு. எந்த ஒரு தனி மனிதனிடமும் சற்று பேச வாய்ப்புக் கிடைத்தால் தன் இரட்சகரையே அவருக்கு அறிவிப்பதில் தீவிரமாயிருப்பார். 2003ம் ஆண்டு ஜூலை 19ம் தேதியன்று தன் ஊழியத்தை முடித்து கர்த்தரின் பிரசன்னத்துக்குள்ளாக அழைத்துக் கொள்ளப்பட்டார். கிறிஸ்துவை அறியாத மக்கள் மீதுள்ள ஆத்தும பாரம், அத்துடன் அவர்கள் ஆண்டவரை அறிய வேண்டும் என்ற ஆழ்ந்த வேட்கை, இதுவே பில் பிரைட்டின் வாழ்வாகும். அவர் தான் மிகவும் நேசித்த ஆண்டவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதே அவரின் இதய வாஞ்சையாகும்.

அவர் விட்டுச் சென்ற மாதிரி, இப்பொழுது வாழ்கிற நம் தலைமுறையினரையும், வரும் சந்ததியினரையும் உற்சாகபப்படுத்தி, கிறிஸ்துவுக்காகச் செயல்படத் தூண்டுகிறதாக உள்ளது.

---

# *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காக அனுப்பப்படுகிறது.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2009) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/– ஆயுள் சந்தா : ரூ.600/–**

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ மாதந்தோறும் ரூ.1000/- கொடுத்து Shalom Mission Partner-ஆக முன் வரலாம்.
- ❖ மாதம் ரூ.500/- கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ மாதம் ரூ.400/- கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ❖ ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- ❖ அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவியின் பெயர் : **சுனிதா N. டோடியார்**
தகப்பனார் பெயர் : சுனிதா டோடியார்
தாயார் பெயர் : சக்குடிபேன் டோடியார்
பிறந்த நாள் : 09.02.2001
படிக்கும் வகுப்பு : IInd
சொந்த ஊரின் பெயர் : பண்டுவால்
மாவட்டம் : பான்ஸ்வாடா
மாநிலம் : இராஜஸ்தான்
படிக்கும் பள்ளி : ஷாலோம் பள்ளி
தங்கி படிக்கும் விடுதி : பிஜல்பூர் மாணவர் விடுதி,

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

**சுனிதாவின்** தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன்னதாக விக்கிரகங்களை வணங்கக்கூடியவராய் மந்திரவாதிகளிடம் சென்றார். இப்படியிருந்த சூழ்நிலையில் ஒருமுறை இவள் தகப்பனார் திடீரென்று வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். வருமானம் எதுவும் இல்லாமல் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. மந்திரவாதிகளிடம் சென்றனர் சுகம் கிடைக்கவில்லை. அப்பொழுது இவர்கள் கிராமத்தில் ஊழியம் செய்த நமது ஷாலோம் ஊழியர் இவள் வீட்டிற்கு வந்து இயேசுவைப் பற்றி கூறி தகப்பனாருக்காக ஜெபித்த போது தேவன் வியாதியி–ருந்து சுகத்தை கொடுத்தார். இவர்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். குடும்பத்தின் வறுமை எல்லாம் மாறியது. இப்பொழுது நமது ஷாலோம் சபையில் விசுவாசிகளாக உள்ளனர்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** நன்றாக படிப்பாள். பாட்டுப்பாடி ஆராதனை செய்வாள், விளையாட்டில் ஆர்வமுண்டு, நடனமாடுவாள், நன்றாக பாடுவாள்.

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** **Mas. N. Jerwin Samuel,** Kattathurai.

(இந்த சிறுமியைப் போல் இன்னும் 250 பிள்ளைகளுக்கு மாதம் ரூ. 400/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் தேவை.)

குழந்தை வளர்ப்பு என்பது பெரும்பாலான ஆண்களைப் பொறுத்தவரை பெண்கள் சமாச்சாரம். குழந்தையை விரும்புகிற அப்பாக்கள் கூட, கைக்குழந்தையைத் தூக்கவோ அதைக் கவனித்துக்கொள்ளவோ தயாராக இருப்பதில்லை. காரணம் குழந்தையை தூக்கும்போது சிறுநீர், மலம் கழிக்கலாம். அல்லது வாந்தி எடுக்கும்.

இதனால் அருவருப்பு அடையும் அப்பாக்கள் சிலர் குழந்தைப் பருவ சிரமங்களைக் கடந்தபிறகு, குழந்தை ஓரளவுக்கு வளர்ந்தபிறகே அதன் வளர்ச்சியில் அக்கறை எடுத்துக்கொள்வார்கள். இந்த மனப்பான்மை மிகத் தவறானது என்கிறார்கள். மனநல மருத்துவர்கள் குழந்தை வளர்ப்பில் ஆரம்பகாலத்தி–ருந்தே அப்பாக்களும் பழக்கப்படுத்தபட வேண்டும் என்கிறார்கள். அவர்கள் எந்தெந்த விதங்களில் குழந்தை வளர்ப்பில் பங்குகொள்ளச் செய்ய முடியும் என்பதற்கு சில யோசனைகள்.

பிறந்த குழந்தையைத் தூக்க முதல் நாளி–ருந்தே தன் கணவனுக்கே கற்றுத்தர வேண்டும் மனைவி. கழுத்து நிற்காத குழந்தையை எப்படி பிடித்துக்கொள்ளவேண்டும். எப்படி வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஒன்றிரண்டு முறைகள் கற்றுக்கொடுத்தால் பழகிவிடும். தாய்ப்பால் குடிக்காத குழந்தைக்கு பாலாடையில் அல்லது பாட்டி–ல் எப்படிப் பால் கொடுக்கவேண்டும் என்பதை குழந்தையின் அப்பாவுக்கும் கற்றுத்தரலாம். இதனால் குழந்தை அழும்போதெல்லாம் பிரசவித்த தாய் எழுந்து, உடலை வருத்திக்கொள்ளாமல் சற்று நேரமாவது ஓய்வெடுக்க முடியும்.

கணவன்–மனைவி இருவருமே வேலைக்குச் செல்கிறார்களானால் குழந்தைக்குச் செய்யவேண்டிய வேலைகளை இருவரும் பகிர்ந்துகொள்ளலாம். உதாரணத்திற்கு குழந்தையைக் குளிப்பாட்டுவது, சாப்பாடு கொடுப்பது போன்றவற்றை ஒருவரும், இரவில் அதற்குச் சாப்பாடு கொடுத்துத் தூங்க வைப்பதை இன்னொருவரும் பிரித்துக்கொள்ளலாம். என்னதான் பிசியான வேலையில் இருந்தாலும், தினம் சிறிது நேரத்தைக் குழந்தையுடன் செலவிடுவதை வழக்கமாகக்கொள்ளும்படி அவரைப் பழக்குங்கள்.

அப்பாவின் முகத்தைப் பார்த்ததும் சில குழந்தைகள் குழந்தை ஏதேனும் பேச முயற்சிசெய்யும். அம்மாவிடம் கூட இப்படி இருக்காது. அவற்றைக் காது கொடுத்து கேட்கவேண்டியது முக்கியம். எனக்கு நேரமில்லை அம்மா கிட்ட சொல்லு என்று தட்டிக்கழிப்பதுதான் உதாசீனப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்வைக் குழந்தையின் மனதில் ஏற்படுத்திவிடும்.

குழந்தை விருப்பமானதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதோடு அப்பாக்களின் கடமை முடிந்து விடுவதில்லை. தன் அன்பை அடிக்கடி வார்த்தைகளால் வெளிப்படுத்த வேண்டும். வார்த்தைகளாலும், செயல்களாலும் மட்டுமே அன்பைக் குழந்தைகளால் புரிந்துகொள்ளமுடியும்.

குழந்தையின் பள்ளிக்கூடத்தில் விசேஷ நாட்கள், ஆண்டு விழா போன்றவற்றிற்குத் தவறாமல் தந்தை செல்ல வேண்டும்.

நன்றி : http://www.dinakaran.com/HEALTH/kulandai.asp

**கிராம ஆலயம்** **காம்மிடி** **குஜராத்**

குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் ஜாலோத் தாலுகாவில் மிகவும் உள்ளடங்கிய போக்குவரத்து வசதி இல்லாத கிராமம் காம்மிடி ஆகும். இந்த கிராம மக்கள் இறந்தர்வகளின் ஆவிகளை தெய்வமாக வழிபடுகிறவர்கள். இவர்களின் தொழில் திருடுவதும், சாராயம் காய்ச்சுவதும்தான், இவர்கள் சாராயத்திற்கு அடிமைபட்டவர்கள்.



இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சம்முடா என்ற சகோதரர். சகோ. சம்முடாவின் மருமகள் சங்கீதாபேன் பிரசவ நேரத்தில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். மருத்துவர்கள் ஆப்ரேஷன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டும் எனக் கூறிவிட்டார்கள். இந்த சூழ்நிலையில்தான் ஜாலோத்தில் நடந்து கொண்டிருந்த ஜெபக்கூட்டத்தில் குடும்பமாக கலந்து கொண்டு ஜெபித்தார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு சங்கீதாபேனுக்கு சுகப்பிரவசத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைக் கண்ட முழு குடும்பமும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தேவனை ஆராதிக்க ஆரம்பித்தனர். பின்பு சகோ. சம்முடா ஷாலோம் சுதேச ஊழியர் மூலமாக தனது வீட்டில் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். இந்தக் கூட்டங்களின் மூலம் அநேக ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். தற்போது 25 குடும்பத்தார் கூடி தேவனை ஆராதனை செய்து வருகின்றனர். பின்பு இதே கிராமத்தைச் சேர்ந்த சகோ. கல்சிங் நிசர்த்தா என்ற வாலிபன் தேவனால் இரட்சிக்கப்பட்டு ஊழியத்திற்குகென்று ஒப்புக் கொடுத்து ஷாலோம் ஊழியர் பயிற்சியில் பயிற்சி பெற்று அபிஷேகம் பெற்று காமெடி கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார். இந்த கிராமத்தில் ஆலயம் அவசியமாகவே சகோ சம்முடா தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாக தரவே அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைபடும்படியாக ஒரு ஆலயம் கட்டப்பட்ட பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராம ஆலயம் சென்னையைச் சேர்ந்த சகோதரி சந்திரா டேவிட் அவர்களின் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

**ஷாலோம் ஜெபக்கூடுகை, கால்டுவெல்காலனி, தூ-டி. (14.08.2009)**




**தலைமை அலுவலக ஊழியர்களுக்கான குடும்பக் கூடுகை (15.08.2009)**




**புதுக்கோட்டை மிஷனெரி தரிசன கூடுகை (15.08.2009(மாலை))**




Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss